# மாணவர்கள் மத்தியில் சமூக விழுமியங்களை மேம்படுத்துவதில் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் பங்களிப்பு

## Role of Co - curricular Activities in Developing Social Values among Secondary School Students

Nizara Jalaldeen

Department of Education and Childcare,
Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka
nizarajalaldeen@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:** மனித விழுமிய மேம்பாடுகளைக் கற்பித்தல் எனும் கருத்தியல் இன்றைய கல்விச் சிந்தனைகளில் முக்கியத்துவம் பெறுகிறது. இன்றைய கல்விமுறை மாணவர்களிடம் அறிவை வளர்த்துச் செல்லுமளவிற்கு மனித விழுமியங்களை வளர்த்துச் செல்வதில்லை. வாழ்க்கைக்குரிய மனித விழுமியங்களைப் போதிப்பதற்கு ஏட்டுக் கல்வி மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளும் அவசியமாகின்றன. இதனடிப்படையில் மாணவர்கள் மத்தியில் சமூக விழுமியங்களை மேம்படுத்துவதில் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் பங்களிப்பினை ஆராயும் வகையில் இவ்வாய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது அளவை நிலை ஆய்வாக வடிவமைக்கப்பட்டு மொனராகலை மாவட்டம், பிபிலை கல்வி வலயத்திலுள்ள தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் 1AB, 1C வகைப் பாடசாலைகள் நான்கினதும் அதிபர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையிலும், இடைநிலைப் பிரிவு மாணவர்களில் 88 பேர் 10:1 என்ற விகிதத்திலும், 21 ஆசிரியர்கள் 4:1 என்ற விகிதத்திலும், 18 பெற்றோர்கள் 5:1 என்ற விகிதத்திலும் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வினாக்கொத்து மூலம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்தும், நேர்காணல் மூலம் அதிபர்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்தும் பெறப்பட்ட தரவுகள் Microsoft Excel மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு இறுதி முடிவுகள் பெறப்பட்டன. இணைப்பாடவிதான செயற்பாடுகள் மாணவர்களது நேரத்தையும், முயற்சியையும் வீணடிப்பதாக பாடசாலைச் சமூகத்தினர் கருதுகின்றனர். இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பெற்றோரின் ஈடுபாட்டைத் தீர்மானிப்பதில் அவர்கள் கொண்டிருக்கும் விழிப்புணர்வும், கல்வியறிவும் முக்கிய காரணிகளாக அமைகின்றன. ஆசிரியர்களின் பங்களிப்பு மிகக் குறைவாகும். வளப்பற்றாக்குறை காரணமாக சில செயற்பாடுகள் புறக்கணிக்கப்படுகின்றன. இணைப்பாடவிதான செயற்பாடுகள் பாடசாலைகளில் முறையாக நடைமுறைப்படுத்தப்படும் போதே மாணவர்கள் மத்தியில் சமூக விழுமியங்கள் மேம்பாடடைகின்றன. எனவே பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மீதான மாணவர்களின் முறையான பங்குபற்றுதலை அதிகரிக்கச் செய்தல் வேண்டும் என்பன கண்டறியப்பட்டு விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள்: சமூகம், கலைத்திட்டம், விழுமியம், இணைப்பாடவிதானம், சமநிலை ஆளுமை

### 1. ஆய்வின் அறிமுகம்

சமகாலக் கல்வியில் சமநிலை ஆளுமை வலியுறுத்தப்படுவதுடன் ஒவ்வொரு பிள்ளையும் அறிவு, திறன், மனப்பாங்கு சார் தேர்ச்சிகளில் உயர் திறனை அடைய வேண்டும் எனும் நோக்கிலேயே கலைத்திட்டமானது வடிவமைக்கப்படுகிறது. பாடக் கலைத்திட்டம் அறிவுசார் விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன் இணைக்கலைத்திட்டம் மாணவர்களது அனைத்து அனுபவங்களையும், செயற்பாடுகளையும் ஒன்று திரட்டி ஒழுங்கமைப்பதோடு திறன், மனப்பாங்கு சார்ந்த ஆளுமைப் பண்புகளையும், சமூக விழுமியங்களையும் கற்றுக் கொள்ள வழிவகுக்கிறது (ஜெயராசா, 1995).

மனிதவள விருத்தியிலும் சமூக அபிவிருத்தியிலும், பொருளாதார அபிவிருத்தியிலும் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. இதனாலேயே பொருளாதார வேறுபாடுகளுக்கு அப்பால் பாரிய நிதியை உலகம் கல்விக்காக செலவிடுகிறது. இக்கல்வியின் முக்கிய நோக்கம் மனித சமுதாயத்தில் பண்புள்ளவர்களை உருவாக்கி நாட்டுக்கேற்ற நற்பிரஜையாக வாழப் பயிற்றுவிப்பதாகும். (நௌபீர், 2013). சமுதாயத்திற்குரிய விழுமியங்களை மாணவர்களிடம் கையளிப்பதில் இன்றைய பாடசாலைகளின் பொறுப்பும், வகிபங்கும் அதிகரித்துள்ளன. ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவது பாடசாலையாகும். கல்வியின் சிறந்த நோக்கத்தினை அடைந்து கொள்ளும் வகையில் பாடசாலையினால் வழங்கப்படும் விழுமியக்கல்வி பலமானதோர் ஊடகமாகத் தொழிற்படுகிறது. பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வியறிவு விழுமியம் சார்ந்த கல்வியாக அமையும் போது அது சாதகமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் (Villoro,2009). இதனடிப்படையில் சமூக விழுமியங்களை மேம்படுத்துவதில் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகிறது என்பதனை ஆராய்வதாகவே இவ்வாய்வானது அமையப் பெற்றுள்ளது.

**2. ஆய்வுப் பின்னணி**

சமூகப் பிராணியான மனிதன் தனது சமுதாய வாழ்க்கைக்கான பயிற்சியைப் பாடசாலையிலிருந்தே பெற்றுக் கொள்கின்றான். கல்வியின் முழுமையான பயன் என்பது வெறுமனே கல்வியறிவு மட்டுமன்றி மாற்றமுறும் சமுதாயத்திற்கேற்ற உடல், உள, சமூக, பண்பாடு, ஆளுமை என சகல வளர்ச்சிகளையும் பெறுவதாகும். புதிய சிந்தனைகளும், நவகலாசாரங்களும் மனிதனின் சமூகப் பெறுமானத்தைக் கேள்விக்குள்ளாக்கி வருகின்றன. அறிவியலும் தொழில்நுட்பமும் பிரமிக்க வைக்குமளவிற்கு அதன் சிகரத்தைத் தொட்டுக் கொண்டிருக்கையில் மனித விழுமியங்களும் பெறுமானங்களும் கீழ் நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன.

நமது நாட்டின் கல்வியமைப்பில் எழுத்தறிவு 92% ஆகவும், பாடசாலைக் கல்வி 98% ஆகவும் அதிகரித்திருந்தாலும் பண்புசார் விருத்தி எதிர்பார்த்தளவு விருத்தியடையவில்லை. சமூக எதிரிகளாக இளைஞர்கள் மாறுவதற்கு சான்றிதழ்மையக் கல்வி மறைமுகமாகப் பங்களிப்பதாகக் கல்வியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். நமது நாட்டின் கல்வி முறை அறிவை மட்டும் அளவிடும் பரீட்சை முறையை இலக்காகக் கொண்டுள்ளதனால் பெற்றோர் தமது பிள்ளைகளுடன் தனியார் வகுப்புகளில் தஞ்சமடைகின்றனர். தனியார் வகுப்புகளின் அபரிமிதமான வளர்ச்சி பாடசாலையை மாணவர்களிடமிருந்து அந்நியப்படுத்தியுள்ளது. இதனால் போட்டித் தன்மைகள், ஒழுக்க சீர்கேடுகள் என்பன ஏற்படுகின்றன. 1974 ஆம்

ஆண்டின் UNESCO ஆய்வும் விழுமியக் கல்வியின்மையைச் சுட்டிக்காட்டி பண்புநல மனப்பாங்கு கட்டியெழுப்பப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளதனை நாம் காணலாம். எனவே இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளை பாடசாலைகளில் விரிவுபடுத்தி அதனூடாக சமூக விழுமியங்களை மாணவர்கள் மத்தியில் வளர்த்தெடுக்க வேண்டியது அவசியமாகும்.

**3. ஆய்வுப் பிரச்சினை**

தற்காலத்தில் பாடசாலைகளில் மாணவர்களிடையே தனிநபர் ஒழுக்க விழுமியங்கள், சமூக விழுமியங்கள் பின்னடைந்து வருவதனைக் காணலாம். பல பாடசாலைகளில் தற்போதுள்ள பாடத்திட்டத்தில் தர்க்க ரீதியான முறையில் உறுதியாகத் திட்டமிடப்பட்ட விழுமிய முறைகள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை (பாலசூரிய, 1999). ஆய்வுப் பிரதேசத்தில் மாணவர்களின் கல்வியடைவுகள் உயர்வாகக் காணப்படினும் அவர்களின் தனிநபர் ஆளுமை, சமூக ஆளுமை, விழுமியப்பண்புகள், சிறந்த பண்பாட்டு நடத்தைகள் என்பன பின்தள்ளப்பட்டுள்ளன. மனித விழுமியங்களற்ற கற்றோர் சமூகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் காணப்படும் அறிவு சமூகத்திற்குப் பயனற்றதாகவே காணப்படுகிறது. சமூக விழுமியங்களைப் போதிப்பதற்கு பாடசாலைகள் எடுக்கும் பிரயத்தனம் அரிதாகவேயுள்ளது. ஆசிரியர்கள் கல்விமயப்படுத்தப்பட்ட ஆளுமையுடையவர்களாகவே காணப்படுகின்றனர். விழுமியச் செயற்பாடுகள் பாடசாலையில் மாத்திரமே கண்காணிக்கப்படுகின்றன. எனவே வகுப்பறைக் கற்பித்தலுக்கு மேலதிகமாக இணைப்பாடவிதான செயற்பாடுகளினூடாகவும் விழுமியங்கள் மேம்படுத்தப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

**4. ஆய்வின் நியாயங்கள்**

தற்காலக் கல்வி முறை குறிப்பெடுக்கும் பெறுபேறு நோக்கிய கல்விமுறையாகக் காணப்படுகிறது. இதனூடாக கற்றோர் சமூகமொன்று தோற்றுவிக்கப்பட்டிருப்பினும் சமூகத்தில் நல்ல மனித வளங்களைக் காண முடியாதுள்ளது. அறிவு எவ்வளவுதான் பன்மடங்கானாலும் அங்கு விழுமியங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுமாயின் அவ்வறிவினால் மானிட சமூகத்திற்கு எந்தவிதமான பயனும் கிடைக்கப் போவதில்லை. அறிகையாற்றல் மட்டுமே மாணவர்களின் கல்வி இலக்கு எனும் கனவுலகத்தில் பயணிக்கும் கல்விச் சமூகத்தினர் மத்தியில் அறிகைசார் விருத்தியுடன் மாணவர்களின் ஆளுமை மற்றும் பண்புசார் திறன் விருத்திகளும் இடம்பெறுவதனூடாகவே முழுமையான விருத்தியைத் தோற்றுவிக்கலாம் எனும் தெளிவை ஏற்படுத்துவதற்கு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

அறிவுத் தொகுதியின் வேகமான விரிவாக்கம் மற்றும் புதிய நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளக்கூடியவர்களாக மாணவர்களை வளர்த்தெடுத்து சர்வதேசளவில் போட்டியிடும் திறனை வளர்ப்பதற்கான ஊக்கங்களை பாடசாலைகள் நிறைவானளவிற்கு வழங்குவதில்லை. கல்வி கற்று வெளியேறும் மாணவர்களில் பெரும்பான்மையானோர் உயர் சமூக, வாழ்க்கைத் திறன்களைப் பெறாதவர்களாகக் காணப்படுகின்றனர். ஆளுமைப் பண்புகள், நல் விழுமியங்களைத் தோற்றுவிக்கக்கூடிய இணைப்பாடவிதான செயற்பாடுகள் முறையாக இனங்காணப்பட வேண்டும் என்றடிப்படையில் இவ்வாய்வானது அவசியமாகும்.

**5. ஆய்வின் நோக்கம்**

1. இணைப்பாடவிதான செயற்பாடுகளை அமுலாக்குவதிலுள்ள சவால்களை இனங்காணல்.
2. இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் சமூக விழுமியங்களுக்கும் இடையிலான தொடர்பினைக் கண்டறிதல்.
3. இணைப்பாடவிதான செயற்பாடுகளினூடாக சமூக விழுமியங்களை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டறிதல்.

## 6. இலக்கிய மீளாய்வு

### விழுமியக் கல்வி

விழுமியக் கல்வி எனப்படுவது சமூக விழுமியங்களைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கின்ற செயற்பாடாகும். இது பிள்ளையில் நேர்ப்பாங்கான மாற்றத்தைத் தோற்றுவிப்பதுடன் தனியாள் தொடர்புகளையும் விருத்தி செய்கிறது. அறிவைப் பொருத்தப்பாடுடையதாக ஆக்குகின்றது (Paoli, 2006). விழுமியக் கல்வியின் நோக்கம் மாணவர்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பித்து நற்பண்புகளை வளர்ப்பதாகும் (Jones, 2009). பாட இணைப்பாடவிதான செயற்பாடுகளினூடாக மாணவர்கள் மத்தியில் விழுமியப் பண்புகளைப் பிரயோகிப்பதற்கான வழிமுறைகள் பாடசாலை சூழலுக்கேற்ப கண்டறியப்பட்டு முன்வைக்கப்படல் வேண்டும் (சோபா, 2015).

### இணைப்பாடவிதான செயற்பாடுகள்

வகுப்பறைக்கு வெளியே இடம்பெறும் மையக் கலைத்திட்டத்தில் உள்ளடங்காத கல்விசாரா செயற்பாடுகள் இணைப்பாடவிதான செயற்பாடுகள் எனப்படும் (Bartkus et. al, 2012). பாடசாலைக் கலைத்திட்டத்துடன் ஒன்றிணைந்ததாகக் காணப்படும் இவை கலைத்திட்டத்தை உயிரோட்டமானதாக ஆக்குவதுடன், மாற்று வளங்களையும், வாழ்நாள் முழுவதுமான அனுபவங்களையும் மாணவர்களுக்கு வழங்குகின்றன (Acquah & Anti Partey, 2014).

## 7. ஆய்வு முறையியலும் வடிவமைப்பும்

இவ்வாய்வானது அளவை நிலை ஆய்வாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன் முதலாவது அத்தியாயத்தில் அறிமுகம், ஆய்வுப் பின்னணி, ஆய்விற்கான நியாயம், ஆய்வுப் பிரச்சினை, நோக்கங்கள் என்பன அடங்குகின்றன. ஆய்வினை சிறப்பான முறையில் நடத்திச் செல்ல இரண்டாம் அத்தியாயத்தில் இலக்கிய மீளாய்வும், மூன்றாம் அத்தியாயத்தில் ஆய்வு முறையியலும், நான்காவது அத்தியாயத்தில் தரவுப் பகுப்பாய்வும் இடம்பெறுகின்றன. ஆய்வுக்குத் தேவையான தகவல்களைப் பெறும் பொருட்டு வினாக்கொத்து, நேர்காணல் போன்ற ஆய்வுக் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் மாதிரிகளிடமிருந்து பெறப்பட்ட அளவு மற்றும் பண்பு ரீதியான தரவுகள் Microsoft Excel மூலம் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு இறுதி முடிவுகள் பெறப்பட்டன. இது ஐந்தாவது அத்தியாயமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.


## 8. தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்

வினாக்கொத்து மூலம் அளவு ரீதியாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் Microsoft Excel உதவியுடன் புள்ளிவிபர ரீதியில் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுட்டுள்ளதுடன் பண்பு ரீதியாகப் பெறப்பட்ட தரவுகளுக்கான காரணங்களும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.


அட்டவணை 1: இணைப்பாடவிதான செயற்பாடுகள் புறக்கணிக்கப்படுவதற்கான காரணங்கள்

| இல | பதில் நிலை | மாணவர்கள் | | ஆசிரியர்கள் | |
|---|---|---|---|---|---|
| | | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| 1. | கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படல் | 14 | 37% | 05 | 50% |
| 2. | நேரம் விரயமாக்கப்படல் | 12 | 32% | 03 | 30% |
| 3. | பயனற்றதென்ற உணர்வு | 05 | 13% | - | 0% |
| 4. | பொருத்தமான வழிகாட்டலின்மை | 07 | 18% | 02 | 20% |


மூலம்: ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது





உரு 1: இணைப்பாடவிதானத்தில் பெற்றோரின் ஈடுபாடின்மைக்கான காரணிகள்




உரு2: இணைப்பாடவிதானத்தில் ஆசிரியர்களது பங்களிப்பு




உரு 3: இணைப்பாடவிதானத்திற்கு மேலதிக செயற்பாடுகளில் பால்நிலையின் செல்வாக்கு




உரு 4: இணைப்பாடவிதான நேரம் ஒதுக்கப்படல்

## 9. முடிவுகளும் கலந்துரையாடலும்

### 9.1 இணைப்பாடவிதான செயற்பாடுகளை அமுலாக்குவதில் சவாலாக அமையும் காரணிகள்

பாடசாலைக் கலைத்திட்டத்தில் இணைக்கலைத்திட்ட அம்சங்கள் உள்வாங்கப்பட வேண்டும் எனும் நோக்கில் கல்வியமைச்சின் 1983/12 சுற்றுநிருபத்திலே அதன் அவசியம் எடுத்துக்

காட்டப்பட்டிருந்தது. பல்வேறு ஆற்றல்களையும், ஆக்கத்திறன்களையும் விருத்தி செய்தல், கலாசாரத்தைக் கையளித்தல், மாணவர்களிடையே விழுமியப்பண்புகளைக் கட்டியெழுப்புதல் போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகள் முறையாக அமுல்படுத்தப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேறுகளைக் கொண்டு பாடசாலைகளைத் தரமிடுகின்ற ஒரு வகையான சமூக அளவீட்டு முறைகள் பரீட்சைகளை நோக்கிய வகுப்பறைக் கற்பித்தலைக் குவியப்படுத்தி இணைப்பாடவிதான செயற்பாடுகளைப் புறந்தள்ளியுள்ளன. கற்றலிலும் பார்க்க மாணவர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அதிக ஆர்வங் காட்டி வருவதனால் அவர்களது கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுமோ எனும் அச்சம் 50% ஆன ஆசிரியர்கள் மத்தியில் நிலவுகிறது. தமது பிள்ளைகள் கற்றலில் முழுக் கவனம் செலுத்துவதையே பெற்றோரும் விரும்புகின்றனர்.

41 சதவீதமான பெற்றோரிடம் இணைப்பாடவிதான செயற்பாடுகள் குறித்த தெளிவு காணப்படவில்லை. பொதுப் பரீட்சைகளில் தமது பிள்ளைகள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதில் அதீத அக்கறை காட்டுமளவிற்கு அவர்களின் உடல், உள விருத்தியில் பெற்றோர் பங்கு கொள்வதில்லை. பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பாக இவர்களிடம் காணப்படும் தேவையற்ற பீதி மாணவர்களின் பங்குபெறுதலைத் தடை செய்கின்றது. ஓரிரு பெற்றோர்களே அதனையும் தாண்டி பிள்ளைகளுக்கு பக்கபலமாக நிற்கின்றனர். இது அவர்கள் பெற்றிருக்கும் கல்வியறிவு, விழிப்புணர்வு என்பவற்றைப் பொறுத்து அமைகின்றது.

33 சதவீதமான ஆசிரியர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்கு கொள்வதில்லை. இணைப்பாடவிதானத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்படும் போது தமது வேலைப்பளுவையும், தனிப்பட்ட தேவைகளையும் காரணங்காட்டி இவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளவே முயற்சிக்கின்றனர்.

சமமற்ற வளப்பகிர்வு, வளங்களின் முறையற்ற பாவனை காரணமாக இப்பாடசாலைகளில் மனித, பௌதீக, நிதிவளப்பற்றாக்குறை நிலவுகிறது. இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் ஆர்வம் அதிகமாகக் காணப்படினும் அவர்களின் தனியாற்றலை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளும், வளங்களும் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. பாடசாலை மட்டத்தில் சில செயற்பாடுகள் புறக்கணிக்கப்படுகின்றன. இணைப்பாடவிதான செயற்பாடுகள் கவர்ச்சித்தன்மையை இழந்துள்ளன. இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கான நேர ஒதுக்கீடு பயிற்சிகளை முன்னெடுப்பதற்குப் போதியதாக இல்லை. இதனால் மாணவர்கள் மத்தியில் முழுமையான விருத்தியை ஏற்படுத்த முடியாதுள்ளது.

இணைப்பாடவிதானத் தெரிவில் பால்நிலையின் செல்வாக்கு காணப்படுவதாக 46% ஆன மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளில் ஆண் மாணவர்களே கூடுதலான ஈடுபாட்டினைக் காட்டி வருகின்றனர்.

### 9.2 இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் சமூக விழுமியங்களுக்குமிடையிலான தொடர்பு

பரீட்சை நோக்குடைய பாட விடயங்கள், இணைப்பாடவிதான செயற்பாடுகளின் போதாமை காரணமாக பாடசாலையில் விழுமியங்களை திருப்திகரமாக வழங்க முடியாதுள்ளது. இணைப்பாடவிதான செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்கள் பொறுமை, ஒழுக்கம், விட்டுக்

கொடுப்பு போன்ற நற்பண்புகளைக் கற்றுக் கொள்வதோடு பொறுப்புமிக்க சகபாடிகள் வட்டத்தையும் உருவாக்கிக் கொள்கின்றனர். ஓய்வுநேரம் பயனுள்ளதாக்கப்படுவதோடு மாறுபட்ட நடத்தைகளிலிருந்தும், சூழலின் செல்வாக்கிலிருந்தும், மன அழுத்தங்களிலிருந்தும் மாணவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். விழுமியக் கல்வியினைப் புகட்டுவதற்கு மிகச் சிறந்த வழி இணைப்பாடவிதான செயற்பாடுகளை அமுல்படுத்துவதாகும்.

## 10. பரிந்துரைகள்

- பெருமளவிலான மாணவர்களை உள்ளீர்க்கக்கூடிய வகையில் பல்வேறுபட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகளை மாணவர் தொகை, பாடசாலையிலுள்ள வளங்கள், பாடசாலையின் அமைவிடம், சமூக ஒத்துழைப்பு என்பவற்றிற்கேற்ப தேர்ந்தெடுத்து, திட்டமிட்டு அவற்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
- பாட விடயங்களுடன் இணைந்ததாக இணைப்பாடவிதான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு அதனூடாக மாணவர்கள் பெறும் அனுபவங்கள் வகுப்பறையில் முறையாகப் பிரயோகிக்கப்படுமாயின் கற்றல் செயற்பாடுகள் தடையின்றி நிகழும்.
- குடும்ப சூழலை சிறந்த முறையில் மாற்றியமைப்பதில் பெற்றோர் அக்கறை காட்ட வேண்டும். பிள்ளைகளின் இணைப்பாடவிதான அடைவுகளிலும் பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும். பாடசாலையுடன் பெற்றோர் தொடர்பினை ஏற்படுத்துவதற்கான நெகிழ்வுத் தன்மை பாடசாலைக் குடும்ப ஒருங்கிணைப்பாளரின் உதவியுடன் உருவாக்கப்படுமாயின் அவர்களின் ஒத்துழைப்புகளைப் பூரணமாகப் பெறலாம்.
- பாடசாலை பூராகவுமுள்ள ஆசிரியர்களால் அமைக்கப்பட்ட கிடையான அணிகளை அறிமுகப்படுத்தி கூட்டு அணுகுமுறைகள் ஊக்குவிக்கப்படலாம். அதன் மூலம் பாடசாலையிலுள்ள சகல ஆசிரியர்களதும் பங்குபற்றலை முழுமையாகப் பெறலாம்.
- இருக்கின்ற வளங்களை உச்சளவில் பயன்படுத்துபவர்களாகவும், பாடசாலை அமைந்துள்ள சமூகத்திலுள்ள வளங்களைப் பாடசாலைக்குள் கொண்டு வந்து பயன்படுத்தக்கூடியவர்களாகவும் தொண்டர் ஸ்தாபனங்கள் மற்றும் சமூகத்துடன் சிறந்த இணைப்பினை ஏற்படுத்துபவர்களாகவும் அதிபர்கள் திகழ வேண்டும்.
- அனுபவம் மிகுந்த, திறமையான பயிற்றுவிப்பாளர்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். பாடசாலைக்கு நிதி கிடைக்கப் பெறும் மூலங்களை இனங்காணல், வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல், செலவு நன்மைகளை மதிப்பிடல், செலவுகளைப் பொருத்தமான வழிமுறைகளில் கட்டுப்படுத்துதல் போன்றவற்றின் மூலம் நிதிசார் சவால்களை முறியடிக்க முடியும்.
- போதுமான உபகரணங்களை தர உள்ளீட்டுப் பொருட் கொள்வனவு மூலமாகப் பெற்றுக்கொள்ளல், சீரான மெய்ச்சொத்துப் பராமரிப்பு, பழுதடைந்த உபகரணங்களை திருத்தியமைத்துப் பயன்படுத்தலையும் மேற்கொள்ள வேண்டும். நேர ஒதுக்கீடும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- பாடசாலைக் கல்விக் கொள்கைகளில் விழுமியம்சார் செயற்றிட்டங்கள் இணைத்துக் கொள்ளப்படுவதோடு ஆசிரியர்கள் விழுமியச் செயற்பாடுகளை வெளிப்படுத்தும் முதல் நிலை முகவராகத் தொழிற்படும் சூழலை பாடசாலைகள் ஏற்படுத்த வேண்டும். வீட்டுச்

சூழலினை விழுமியம்சார் நடைமுறைகளை அமுல்படுத்த உதவும் அலகாக உருவாக்க விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களைப் பெற்றோருக்கு வழங்க வேண்டும்.

- இணைப்பாடவிதான செயற்பாடுகள் தொடர்பிலான அனுபவப் பகிர்வுகள் வலய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். இது அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளவும், நடைமுறையிலுள்ள பல பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெறவும், புதியன புனையவும், முன்மாதிரியான இணைப்பாடவிதானத் திட்டத்தை உருவாக்கிக் கொள்ளவும் வாய்ப்பளிக்கும்.
- மாணவர் தொகைக்கும், மாணவர் பங்குபற்றும் வாய்ப்புகளுக்குமிடையில் ஓர் எதிர்த் தொடர்பு நிலவுவதனால் ஒவ்வொரு மாணவருக்கும் வாய்ப்புத் தரக்கூடிய வகையில் பாடசாலைகள் வெவ்வேறு பிரிவுகளாகப் பிரித்து நிகழ்ச்சிகளை ஒழுங்கமைக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் தமக்குப் பொருத்தமான இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்கு கொள்வதை பாடசாலைகள் உறுதி செய்ய வேண்டும்.
- மாணவர்களுக்கான பயிற்சிகளை பாடசாலை நேரத்திலும், பின்னேரங்களிலும் மேற்கொள்வதற்கான எற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். தொடர்ச்சித்தன்மையற்ற பயிற்சிகளும், செயற்பாடுகளும் மாணவர்களின் ஆர்வத்தைக் குறைப்பதனால் இதில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**உசாத்துணைகள்**


சோபா, பா. (2015). **வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் மேம்பாட்டில் ஒழுக்கம்சார் விழுமியங்களின் பங்களிப்பு**, 2nd international symposium FIA SEUSL.

நௌபீர், ஏ. எல். (2013). **கல்விச் சமூகம் எதிர்பார்ப்பும் வகிபங்கும்**, கல்வி உயிர்த்தெழு மையம் வெளியீடு, இறக்காமம்.

Acquah, B.Y.S, & Anti Partey, P. (2014). **The Influence of co- curricular activities on students' performance in economics**, Journal of Educational Management.

Asmat, A., & Saleem, R. (2009). **Role of Co-curricular Activities: Survey of the perceptions of stake holder's case study of Peshwar District.** Journal of Managerial Sciences 2(2), 213-219.

Bartkus, K.R., Nemelka, B., Gardner, P., (2012). **Clarifying the meaning of extra-curricular activity**, American Journal of Business Education 5(6), 693- 704.

Benard, K. 2016. **Factors influencing students' participation in co-curricular activities in public secondary schools in Lamu County Kenya.** National Commission for Science, Technology and Innovation, University of Nairobi.

Okoro, C.O., Amodioha, S.W. (2016). **Using extracurricular activities to develop social morality**, Rivers State University of Science and Technology.

Owusu, M., & Danso, S. A. (2018). **Promoting Moral Education through Co-curricular Activities,** International Journal of Education and Social Sciences. Vol. 5, No 1.